பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

20 11 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. மகாராஷ்டிரா சட்டப்பேரவை தேர்தல் மற்றும் ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு சற்று முன் தொடங்கியது.
2. பிரதமர் திரு நரேந்திரமோடி மூன்று நாடுகளின் பயணத்தின் நிறைவாக பிரேசிலிலிருந்து கயானா புறப்பட்டுச் சென்றார்.
3. நாட்டின் இறையாண்மையை பாதுகாப்பதில் இந்திய விமானப்படையின் அர்ப்பணிப்பு பாராட்டுக்குரியது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.
4. இந்திய சர்வதேச திரைப்பட விழா கோவாவில் இன்று தொடங்குகிறது,
5. ஆசிய மகளிர் ஹாக்கி சாம்பியன் போட்டி இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியா – சீனாவை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா சட்டப்பேரவை தேர்தல் மற்றும் ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு சற்று முன் தொடங்கியது.

மகாராஷ்டிராவில் காலை ஏழு மணிக்குத் தொடங்கிய வாக்குப்பதிவு மாலை ஆறு மணி வரை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவையொட்டி விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் கண்காணிப்பு கேமராகள் பொருத்தப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு எஸ் சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் நான்டெட் மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவும் இன்று நடைபெறுகிறது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் இரண்டாம் கட்டமாக 38 தொகுதிகளில் காலை ஏழு மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை ஐந்து மணி வரை நடைபெறுகிறது.

நக்ஸல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள 31 வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பு காரணங்களுக்காக மாலை நான்கு மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடையும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஏழாயிரம் வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளதாகவும், இங்கு கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாக்குப்பதிவை வெப் கேமரா மூலம் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு கே ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் 23-ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடி மூன்று நாடுகளின் பயணத்தின் நிறைவாக பிரேசிலிலிருந்து கயானா புறப்பட்டுச் சென்றார்.

1968-ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்திய பிரதமர் ஒருவர் கயானா செல்வது இதுவே முதல்முறையாகும்.

கயானா அதிபர் திரு முகமது இர்பான் அலி-யுடன் பிரதமர் இருதரப்பு பேச்சுக்கள் நடத்துவதுடன், அந்நாட்டு நாடாளுமன்றத்திலும் உரையாற்றவுள்ளார்.

இந்தியா – **Caricom** உச்சி மாநாட்டிலும் பிரதமர் பங்கேற்கிறார்.

முன்னதாக நேற்று பிரேசிலின் ரியோடி ஜெனிரோவில் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வில் திரு நரேந்திரமோடி உரையாற்றினார்.

இந்தியாவில் கடந்த பத்து ஆண்டுகளில் நான்கு கோடி குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கும் திட்டம் உள்ளிட்ட நீடித்த வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் 12 கோடி வீடுகளுக்கு சுத்தமான குடிநீர் வழங்கியது, பத்து கோடி குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்கியது, 11 கோடியே 50 லட்சம் குடும்பங்களுக்கு கழிவறைகள் கட்டிக் கொடுத்தது உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்.

இதன் மூலம் நீடித்த வளர்ச்சியை இந்தியா உறுதி செய்திருப்பதாக அவர் கூறினார்.

பாரீஸ் பருவநிலை மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை நிறைவேற்றிய முதல் நாடு இந்தியா என்றும் அவர் குறிப்பிட்டார்.

வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உற்பத்தி செய்யும் இலக்குடன் அரசு செயல்பட்டு வருவதாகவும், தற்போது வரை 200 ஜிகாவாட் அளவை எட்டியிருப்பதாகவும் அவர் கூறினார்.

சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பு, பேரிடா தடுப்பு கட்டமைப்பில் கூட்டாண்மை, ஒரே சூரியன் - ஒரே உலகம் - ஒரே வழித்தடம் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இந்தியா முன்னேறி வருவதாக திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

ஜி-20 மாநாட்டுக்கு இடையே ஆஸ்திரேலிய பிரதமர் திரு அந்தோணி அல்பனீசை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

பிரரேசில் அதிபர் திரு லூலா டா சில்வா, சிலி அதிபர் திரு **Gabriel boric** -யையும் சந்தித்த திரு நரேந்திரமோடி, இருதரப்பு உறவுகள் மற்றும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து பேச்சுக்கள் நடத்தினார்.

இதற்கிடையே ஜி-20 உச்சி மாநாட்டில் நிறைவுரையாற்றிய பிரேசில் அதிபர் திரு லூலா டா சில்வா, அடுத்த தலைமை பொறுப்பை தென்னாப்பிரிக்க அதிபர் திரு சிறில் ராம போசாவிடம் வழங்கினார்.

பிரேசில் தலைமையில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் எடுக்கப்பட்ட முன் முயற்சிகளை திரு லூலா எடுத்துரைத்தார்.

[]<<<>>>[]

வறுமை, சமத்துவமின்மை, பருவநிலை மாற்றம் போன்ற பிரச்சினைகளில் உலகளாவிய சீர்திருத்தங்களுக்கு ஜி-20 நாடுகள் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று ஐ நா பொதுச்செயலாளர் திரு ஆண்டனியோ குட்டாரஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரேசிலின் ரியோடி ஜெனிரோவில் நடைபெற்ற ஜி-20 நாடுகளின் உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், ஐ நா-வின் கொள்கைகளைப் பின்பற்றி உலக அளவில் அமைதியை உருவாக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இறையாண்மைக்கான கொள்கைகள், ஐ நா தீர்மானங்கள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை உலக நாடுகள் பின்பற்ற வேண்டியது அவசியம் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

ஸ்பெயினில் வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள நிதி மேம்பாட்டுக்கான நான்காவது சர்வதேச மாநாட்டில் இந்த கொள்கைகள் பின்பற்றப்படும் என்றும் திரு ஆண்டனியோ குட்டாரஸ் தெரிவித்தார்.

[]<<<>>>[]

நாட்டின் இறையாண்மையை பாதுகாப்பதில் இந்திய விமானப்படையின் அர்ப்பணிப்பு மற்றும் நிபுணத்துவம் பாராட்டுக்குரியது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று தொடங்கிய விமானப்படை கமாண்டர்கள் மாநாட்டில் பேசிய அவர், உலக அளவில் மாறிவரும் சவால்களை எதிர்கொள்வதில் விமான்படையின் திறன் நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளதாகக் கூறினார்.

நாட்டின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப விமானப்படையினரும், பாதுகாப்புப் படையினரும் தங்களின் திறமையை மேம்படுத்திக் கொள்வதில் விமானப்படை கமாண்டர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று திரு ராஜ்நாத்சிங் தெரிவித்தார்.

நாளை வரை நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் முப்படைகளின் தளபதிகள் பங்கேற்றுள்ளனர்.

[]<<<>>>[]

55-வது இந்திய சர்வதேச திரைப்பட விழா கோவாவில் இன்று தொடங்குகிறது,

மாலை ஐந்து மணிக்கு நடைபெறும் தொடக்க விழாவில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், இணை அமைச்சர் திரு எல் முருகன், கோவா முதலமைச்சர் திரு பிரமோத் சாவந்த் மற்றும் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்கின்றனர்.

தொடக்க நிகழ்வாக ஆஸ்திரேலிய இயக்குநர் மைக்கேல் கிரேஸியின் ‘பெட்டர் மென்’ திரைப்படம் திரையிடப்படவுள்ளது.

தொடக்க விழாவையொட்டி கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

இம்மாதம் 28-ஆம் தேதி வரை நடைபெறும் இந்த திரைப்பட விழாவில் 81 நாடுகளைச் சேர்ந்த 180 திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

[]<<<>>>[]

எந்த ஒரு தனியார் முதலீட்டுத் திட்டங்களையும் ரிசர்வ் வங்கி ஆதரவு அளிக்கவில்லை என்றும், அதுபோன்ற காணொலியை சமூக வலைதளங்களில் வெளியிடுவோருக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரிசர்வ் வங்கி எச்சரித்துள்ளது.

குறிப்பிட்ட திட்டங்களில் மக்கள் முதலீடு செய்யுமாறு அறிவுறுத்தல் வழங்குவது போன்ற காணொலியை ரிசர்வ் வங்கி ஒருபோதும் வெளியிடவில்லை என்றும், மக்கள் முதலீடுகளை செய்யும்போது எச்சரிக்கையுடன் இருக்குமாறும் ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

இதுபோன்ற போலியான காணொலிகள் வெளியாகி வரும் நிலையில் மக்கள் அதனை நம்ப வேண்டாம் என்றும் ரிசர்வ் வங்கி அதில் தெளிவுபடுத்தியுள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் மின்னணு பயிர் சாகுபடி கணக்கீடு இரண்டரை கோடிக்கும். கூடுதலான நிலங்களில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாநில வேளாண்துறை தெரிவித்துள்ளது.

சென்னையில் நேற்று அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் தலைமையில் மின்னணு பயிர் சாகுபடி கண்கீடு தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் சோதனை அடிப்படையில் ஏற்கனவே 110 கிராமங்களில் இந்த முறை அமல்படுத்தப்பட்டதாகவும், பின்னா அனைத்து கிராமங்களிலும் வருவாய்த்துறை மூலம் கணக்கீடு செய்யப்பட்டதாகவும் மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வேளாண் மற்றும் அது சார்ந்த துறைகளின் நலத்திட்டங்களை விவசாயிகள் பெறுவதற்கு இந்த விவரங்கள் பெரிதும் உதவிடும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் நாகை தஞ்சாவூர், தூத்துக்குடி, நெல்லை, தென்காசி உள்ளிட்ட 13 மாவட்டங்களில் ஒரு சில பகுதிகளில் இன்று கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில் நேற்று இரவு முதல் விட்டு விட்டு பெய்து வருகிறது.

இதன் காரணமாக நெல்லை, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்கயில் ல் பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

நெல்லையில் இரவு முதல் பெய்து வரும் மழை காரணமாக தாழ்வான பகுதிகளிர் மழைநீர் தேங்கி உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - திருமலை )----38 செகண்ட்*

**[]<<<>>>[]**

ஆசிய மகளிர் ஹாக்கி சாம்பியன் போட்டியில் இன்று நடைபெறும் இறுதி ஆட்டத்தில் இந்தியா – சீனாவை எதிர்கொள்கிறது.

பீகாரின் ராஜகிரில் இப்போட்டி மாலை ஐந்து மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அனுபமா உபாத்தியாயா வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

***END OF NEWS***